**செ. கு. எண்: 232** **நாள்: 18.12.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 18.12.2018

---

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், காளியபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னசாமி என்பவரின் மகன் திரு. முத்துகுமார் என்பவர் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், மேட்டுப்பாளையம் கிராமத்தில், கஜா புயலால் பாதிப்படைந்த மின் விநியோகத்தினை சீரமைக்கும் பணியில் **16.12.2018** அன்று ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

“கஜா’’ புயலின் தாக்கத்தினால் பாதிப்படைந்த மின் விநியோகத்தினை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. முத்துக்குமார் அவர்களின் குடும்பதினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் **குடும்ப நிலையை கருத்தில் கொண்டு, சிறப்பினமாக,** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **10 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**